BY RPAD:

**PROCEEDINGS OF THE DIRECTOR OF INDIAN MEDICINE AND HOMOEOPATHY, CHENNAI-106.**

**PRESENT: THIRU S. GANESH, I.A.S.**

**L. DIS. No.15884/E2/1/2019** **Dated:11.11.2019.**

Sub: Establishment – Department of Indian Medicine and Homoeopathy – Duties and Responsibilities for District Siddha Medical Officers – Orders Issued - Regarding

-----

**ORDERS:**

**The Duties and Responsibilities for District Siddha Medical Officers are fixed as follows.The District Siddha Medical Officers are requested to look after the following duties without any deviation**

1. The District Siddha Medical Officers should control and supervise all the institutions under his / her control.
2. Periodically inspect all the Institutions as per guidelines.
3. Offer advises in Professional matters concerning the administration of the ISM Institutions and all IEC activities
4. Check and monitor the indents for the supply of medicines to all ISM&H Institutions.
5. Send correspondence with Director of Indian Medicine & Homoeopathy on all matters, relating to the administrative control and improvement of the institutions of ISM & H.
6. Carry out all routine service matters viz sanction of increments, encashment of Earned Leave etc., in respect of all staff working under his / her control without any delay.
7. Carry out the instructions issued then and there by the Government / Director of Indian Medicine & Homoeopathy effectively for good governance.

Scanned with CamScanner

8. Advise the Assistant Medical Officers to maintain the Institution premises neat and clean and hygiene and motivate for maintenance of Herbal Garden.

9. Propagate among the public about the effectiveness of AYUSH system.

**S.GANESH**
Director of Indian Medicine and Homoeopathy

**To**
All District Siddha Medical Officers in the State
– for information and strict adherence.

**Copy to:**

1. E1-1 Section of this office.
2. Spare copy
3. Stock File

// True Copy // Forwarded //

11/1/

**JOINT DIRECTOR**

Scanned with CamScanner

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை : திரு.சு.கணேஷ், இ.ஆ.ப.**

**ந.க.எண்.015884/நி2/1/2019** **நாள்:11.11.2019**

பொருள்: நிர்வாகம் - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை-106 – மருத்துவமனைப் பணியாளர்கள் (ம) பல்நோக்கு பணியாளர்களின் கடமைகள் (ம) பொறுப்புகள் தொடர்பாக ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக

------------

**ஆணைகள்:**

**சென்னை-106, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து மருத்துவமனைப் பணியாளர்கள் (ம) பல்நோக்கு பணியாளர்களுக்கும் கீழ்க்காணும் கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் அனைவரும் தங்களின் கீழ் பணிபுரியும் மருத்துவமனைப் பணியாளர்கள் (ம) பல்நோக்கு பணியாளர்களிடையே இக்கடமைகள் மற்றும் பொறுப்பு விவரங்களை சுற்றறிக்கை மூலம் அனுப்பி, இவ்வாணைகளை தவறாது கடைபிடிக்க அறிவுறுத்துமாறு ஆணை வழங்கப்படுகிறது:**

1. உள்நோயாளர் பிரிவுகளில் உள்ள தரை, கைகழுவும் தொட்டி, குளியலறை, கழிப்பறை பீங்கான்கள், சுவர் மற்றும் அப்பிரிவுகளில் உள்ள ஜன்னல், சுவர் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்க வேண்டும் மற்றும் கால்நடைகள் மருத்துவ நிலையங்களில் நுழையா வண்ணம் பராமரிக்க வேண்டும்.

2. உள்நோயாளர்களுக்கு சிறுநீர் மற்றும் மலம் சேகரிக்கும் கலனை சுத்தமாக அளிக்கவும் மற்றும் அவர்களை மருத்துவ ஆய்வுகளுக்கு அழைத்துச் செல்வதற்கான பணிகளை செவ்வனே செய்தல் வேண்டும்.

3. சிறுநீர், மலம் சேகரிக்கும் கலன்கள், அழுக்கான மற்றும் தொற்றுநோய் பரவாத வகையில் பொருட்களை சுத்தமாக பராமரிக்க வேண்டும்.

4. சிறுநீர் மற்றும் மலம் சேகரிப்பதில் நோயாளர்களுக்கு உதவி செய்தல் வேண்டும்.

5. உள்நோயாளர் பகுதியில் இறக்கும் நோயாளர்களின் உடல்களை பிணவறைக்கு எடுத்துச் செல்லுதல் மற்றும் அறுவை சிகிச்சையின்போது எடுக்கப்படும் மாதிரிகளை மற்றும் உடலுறுப்புகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

6. துணிகள், மெத்தைகள் மற்றும் உள்ளிருப்புப் பகுதிகளில் நோய்த் தொற்றாமல் பார்த்துக் கொள்ளவும், அழுக்கான துணிகளை உடனுக்குடன் சலவையகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

Scanned with CamScanner

7. நோயாளர்களை அழைத்துச் செல்லும் தள்ளுவண்டி பணியாளராகவும் (Structure Bearer) பணிபுரிய வேண்டும்.

8. நோயாளர்களை ஒரு பகுதியிலிருந்து, தேவையான பகுதிக்கு நோயாளர்களை பாதுகாப்பான முறையில் அழைத்துச் செல்ல வேண்டும்.

9. அவசர ஊர்தி / அமரர் ஊர்தி (Ambulance & Mortuary Van) பணியாளராகவும் (Ambulance & Mortuary Van Attendant) பணிபுரிய வேண்டும்.

10. பகல் மற்றும் இரவு நேர காவலராகவும் / வாயில் காவலராகவும் பணிபுரிய வேண்டும்.

11. மருத்துவ நிலையங்களில் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், தளவாடச் சாமான்கள், உணவு மற்றும் இதர பலவிதமான பொருட்களை பாதுகாப்பான வகையில் எடுத்துச் செல்ல வேண்டும்.

12. துறைத் தலைவர் / உடனடி மேல் அலுவலர் அவ்வப்போது கூறும் அனைத்து பணிகளையும் செய்ய வேண்டும்.

**சு.கணேஷ்**
இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

**பெறுநர்:**
இவ்வியக்குநரகத்தின் கீழ் பணிபுரியும் அனைத்து மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் பல்நோக்கு பணியாளர்கள் - மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் மூலமாக

**நகல்:**
1. அனைத்து மாவட்ட சித்த அலுவலர்கள்
- தகவலுக்காகவும், உரிய மேல் நடவடிக்கைக்காகவும்

2. உதிரி / இருப்புக் கோப்பு

இணை இயக்குநர்

Scanned with CamScanner

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை : திரு.சு.கணேஷ், இ.ஆ.ப.**

**ந.க.எண்.015884/நி2/1/2019** **நாள்:11.11.2019**

பொருள்: நிர்வாகம் - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை-106 – உதவி மருத்துவ அலுவலர்களின் கடமைகள் (ம) பொறுப்புகள் தொடர்பாக ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக

------------

**ஆணைகள்:**

**சென்னை-106, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து உதவி மருத்துவ அலுவலர்களுக்கும் கீழ்க்காணும் கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் அனைவரும் தங்களின் கீழ் பணிபுரியும் உதவி மருத்துவ அலுவலர்களிடையே இக்கடமைகள் மற்றும் பொறுப்பு விவரங்களை சுற்றறிக்கை மூலம் அனுப்பி, இவ்வாணைகளை தவறாது கடைபிடிக்க அறிவுறுத்துமாறு ஆணை வழங்கப்படுகிறது:**

1. சேவை மனப்பான்மையுடன் அரசு குறிப்பிட்டுள்ள நேரத்திற்குள் தவறாமல் மருத்துவமனைக்கு வந்து பொது மக்களுக்கு தொய்வின்றி பணியாற்றிட வேண்டும்.

2. மருந்தாளுநர்கள் இல்லாத இடங்களில் உரிய மருந்துகள் வழங்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்திடல் வேண்டும். குறிப்பிட்டுள்ள கால இடைவெளியில் மருந்தகத்தை ஆய்வு செய்ய வேண்டும்.

3. மாதந்தோறும் மருந்துகள் இருப்பை சரிபார்க்க வேண்டும்.

4. முதன்மை இருப்பு குறித்து அவ்வப்போது கண்காணித்து விவரங்களை மாவட்ட சித்த மருத்துவ அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. வாராந்திர விடுப்பு வழங்கப்படும் நேரங்களில் மருத்துவமனை பணிகளுக்கு எந்தவித குறைபாடுகளும் நேரா வண்ணம் பணிபுரிய வேண்டும்.

6. மருந்தாளுநர் பராமரிக்கும் பதிவேடுகள் / பதிவுகளை சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அதன் தொடர்பாக அவ்வப்போது ஆய்வு செய்யப்பட வேண்டும்.

7. பணி நேரத்தில் நோயாளர் நலன் கருதி பணியில் கவனிப்பாக இருத்தல் வேண்டும்.

8. வட்டார மருத்துவ அலுவலரின் ஆணையின்படி முகாம் செல்ல பணிக்கப்பட்டால், தவறாது முகாமிற்கு செல்ல வேண்டும். பொது மக்களுக்கு உரிய சேவையினை செய்ய வேண்டும்.

Scanned with CamScanner

9. மருத்துவமனையில் / அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவமனைப் பணியாளர் / அடிப்படைப் பணியாளர் பராமரித்து வரும் மூலிகை தோட்டத்தினை மேற்பார்வையிட்டு, சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும்.

10. விளம்பரம் மற்றும் தகவல் [(Information, Education and Communication (IEC)] தொடர்பான பொருள்கள் மற்றும் சாதனங்களை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

11. யோகா மற்றும் இயற்கை மருத்துவம் தொடர்பாக நோயாளர்களுக்கு விளக்கம் அளித்து யோகா பயிற்சியினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான அறிக்கையினை மாவட்ட சித்த மருத்துவ அலுவலருக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

12. யோகா பயிற்சியானது, கர்ப்ப கால பராமரிப்பு, தொற்றா நோய் பராமரிப்பு, சுக வாழ்வு என்ற மூன்று நிலைகளிலும் வழங்கப்பட வேண்டும்.

13. தொற்றா நோய்கள் பிரிவில் தேவையான மருத்துவ உதவிகளை செய்திடல் வேண்டும்.

14. பொது மக்களுக்கு எவ்வித இடையூறுகளின்றி மருந்துகளை வழங்க ஆவன செய்திடல் வேண்டும்.

15. மருத்துவ அலுவலர் / மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் ஆகியோர்களது ஆணையினை பின்பற்றி நல்ல முறையில் பணியாற்றிட வேண்டும்.

**சு.கணேஷ்**
இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

**பெறுநர்:**
இவ்வியக்குநரகத்தின் கீழ் பணிபுரியும் அனைத்து உதவி மருத்துவ அலுவலர்கள்
- மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் மூலமாக

**நகல்:**
1. அனைத்து மாவட்ட சித்த அலுவலர்கள்
- தகவலுக்காகவும், உரிய மேல் நடவடிக்கைக்காகவும்

2. இவ்வியக்குநரக நி1-2 பிரிவு உதவியாளர்

3. உதிரி / இருப்புக் கோப்பு

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர்

Scanned with CamScanner